விண்ணப்ப எண்:

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை – 600 113

☎ : 044–22542992, website : www.ulakaththamizh.in e-mail : iitstaramani@gmail.com

2027ஆம் ஆண்டு கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் பட்டய வகுப்பு

விண்ணப்பம்

நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பம் நிறுவனத்தில் சேர வேண்டிய கடைசி நாள் : **18.12.2026**

விண்ணப்பதாரர் நிழற்படம்

1. பெயர் (தமிழில்) : . .. .

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தரமணி, சென்னை

2027ஆம் ஆண்டுக்கான கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் பட்டய வகுப்பு (ஓராண்டு காலம்)

கையேடு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால் 2019ஆம் ஆண்டு முதல் திருக்குறள் ஓவியக் காட்சிக்கூடத்தின் வழியாகத் தொல்லியல் அறிஞர்களைக் கொண்டு கல்வெட்டியல், தொல்லியல் மற்றும் அகழாய்வுகள் குறித்த ஓர் ஆண்டுப் பட்டய வகுப்பு நடத்தப்பட்டு வருகின்றது. கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் கற்கும் ஆர்வம் கொண்டவர்களுக்கு இவ் வகுப்பு மிகுந்த பயனுள்ளதாக அமைந்துள்ளது. அந்தவகையில் 2027ஆம் ஆண்டுக்கான கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் பட்டய வகுப்பு தொடங்கப் பெறவுள்ளது.

பயிற்சியின் நோக்கங்கள்

I. தமிழர்கள் பயன்படுத்திய பழங்காலப் பொருட்கள் மற்றும் கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துகள் ஆகியவற்றின் தொன்மை மற்றும் வடிவமைப்புகள் மீளப்பெறுவதற்கானப் பயிற்சி அளித்தல்.

II. இதன் மூலம் தமிழ் மக்களின் வாழ்க்கை வரலாறு, அவர்களின் கலை மற்றும் பண்பாட்டுக் கூறுகள், தொன்மை இலக்கியங்கள் ஆகியவற்றை அறிந்து, நம் இலக்கியங்கள் கற்பனை அல்ல என்பதை நிறுவுதல்.

III. இவ்வகுப்பில் பயிலும் மாணவர்கள் தமிழ் மக்களின் பழம் பெருமைகளை அறிந்துகொள்வதோடு தொன்மை வாய்ந்த கல்வெட்டுகளைப் படித்தறிந்துக் கல்வெட்டுகளைப் படியெடுக்கவும், அவற்றை ஆவணப்படுத்தவும் முடியும் என்பதால், வருங்காலச் சந்ததியினருக்கு இப்பட்டறிவைக் கொண்டு செல்ல இயலும்.

IV. இவ் வகுப்பின் போது நேரடிக் கள ஆய்வுகளும் மேற்கொள்ளப்படும். இதன் மூலம் அனுபவப்பூர்வமான பயிற்சியைப் பெற இயலும்.

இலக்கு

I. தமிழ் மொழியின் பாரம்பரிய, செவ்வியல் தன்மையை அறிந்து கொள்ள வகை செய்தல்.

II. வழக்கொழிந்துள்ள தமிழ்ச் சொற்களை மீட்டெடுத்து அவற்றைப் பயன்பாட்டுக்குக் கொண்டுவருதல்.

III. கண்டறியப்படாமல் மறைந்து கிடக்கும் கல்வெட்டுகளையும், தொன்மைப் பொருட்களையும் கண்டெடுத்து அவற்றைப் பொதுமக்களின் பார்வைக்குக் கொண்டு வருவதுடன், அதன் பழம்பெருமைகளை அறிந்து கொள்ள வகைசெய்தல்.

கல்வித் தகுதி

10 ஆம் வகுப்பு தேர்ச்சி

வகுப்புக் காலம்

ஓராண்டு (வாரம் தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் (முழு நேரம்) நடத்தப்படும். தவிர்க்க இயலாத காரணிகள் ஏற்படின் இணையவழி வகுப்புகள் நடத்துவது குறித்து முடிவெடுக்கப்படும்.

கட்டணம்

விண்ணப்பக் கட்டணம் + சேர்க்கைக் கட்டணம் + அடையாள அட்டை. + தேர்வுகள் கட்டணம் + பட்டயச் சான்றிதழ் கட்டணம் என மொத்தம் ரூ.4000/– (ரூபாய் நான்காயிரம் மட்டும்) The Director. International Institute of Tamil Studies எனும் பெயரில் தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் வரைவோலையாக எடுத்தல் வேண்டும் அல்லது நிறுவனத்திற்கு நேரடியாக வந்து அலுவலகத்தில் ரொக்கமாகச் செலுத்திடலாம்.

செலுத்தப்பட்ட கல்விக்கட்டணம் எக்காரணம் கொண்டும் மாணவர்களுக்குத் திரும்ப வழங்க இயலாது.

பாடத்திட்டங்கள்

தாள் 1 – கல்வெட்டியல்

தாள் 2 – தொல்லியல்

தாள் 3 – கலைகள் (கோயில் கட்டடக்கலை)

இப்பயிற்சி வகுப்பின் பாடத்திட்டத்தில் உள்ள தாள்களின் வழி கல்வெட்டியல், தொல்லியல் மற்றும் கலைகள் (கோயில் கட்டடக்கலை, சிற்ப அமைதி, ஓவியங்கள்) குறித்த வகுப்புகள் இடம்பெறும். கல்வெட்டு எழுத்துக்கள், தொல்லியல் அகழாய்வுகள், கோயில் கட்டடக்கலை, நாணயவியல், தமிழ்நாட்டின் அரசியல், சமூகம் மற்றும் பொருளாதார வரலாறு (கி.மு. 3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.16ஆம் நூற்றாண்டு வரை) அத்துடன் நீரடி அகழாய்வுகள், தொல்லியல் அகழாய்வுகளில் நவீன அறிவியல் பயன்பாடுகள், காலக் கணக்கீட்டு முறைகள் போன்றவையும் நடத்தப்படும்.

பயிற்றுவித்தல் முறை

கல்வெட்டியல், தொல்லியல், கலைகள் உள்ளிட்ட மூன்று தாள்களுக்கான எழுத்துத் தேர்வுகளை நடத்துவதுடன் மாணவர்களுக்குத் தொல்லியல் ஆய்வுகள்

மற்றும் அகழ்வாராய்ச்சிகள், கல்வெட்டுப் படித்தல் மற்றும் படியெடுத்தல், தொல்பொருட்களைப் பாதுகாத்தல் மற்றும் ஆவணப்படுத்துதல் போன்ற களப்பயணயம் (ஒருமுறை மட்டும்) வாயிலாக நடைமுறைப் பயிற்சிகள் அளிக்கப்படும்.

இறுதியாக ஒவ்வொரு மாணவர்களும் பாடத்திட்டத்தின் முடிவில் பாடத்திட்டம் தொடர்பான ஏதேனும் ஓர் தலைப்பினைத் தேர்ந்தெடுத்து திட்டக் கட்டுரையினைச் (25–30 பக்கங்கள்) சமர்ப்பிக்க வேண்டும். சமர்ப்பித்து எழுத்துத் தேர்வில் வெற்றி பெறுபவர்களுக்கு மட்டும் சான்றிதழ்கள் வழங்கப்படும். 60% வருகைப்பதிவு உள்ளவர்கள் மட்டுமே எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர். மாணவர்கள் மூன்றாண்டுகளுக்குள் எழுத்துத் தேர்வு மற்றும் திட்டக் கட்டுரை சமர்ப்பிக்க அவகாசம் அளிக்கப்படும். மூன்றாண்டுகளுக்கு மேல் புதிய சேர்க்கைப் பெற்றே படிப்பினைத் தொடர முடியும்.

பயனடைவோர்

இப்பட்டய வகுப்பில் தமிழ், வரலாறு மற்றும் தொல்லியல் போன்ற பாடப்பிரிவுளைச் சேர்ந்தவர்கள் மட்டுமின்றி இத்துறைகளைச் சாராத மற்ற பாடப்பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்கள், பொறியாளர்கள், தகவல் தொழில்நுட்பப் பிரிவில் பணியாற்றுபவர்கள், வழக்கறிஞர்கள், சிற்ப சாஸ்திர வல்லுநர்கள், ஆசிரியர்கள் போன்ற பல்வேறு துறைகளில் பணியாற்றக் கூடியவர்களும் தமிழின் தொன்மையினை அறிவதோடு கல்வெட்டியல், தொல்லியல் அகழாய்வுகள் மற்றும் கலைகள் உள்ளிட்டவற்றைக் கற்று அவரவர் துறைகளுக்கு ஏற்ப ஒப்பாய்வுசெய்து பயனடைவர். 2019ஆம் ஆண்டு முதல் இப்பட்டயப் பயிற்சி வகுப்பில் பயின்று 1751க்கும் மேற்பட்டோர் பயனடைந்துள்ளனர்.

விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய முகவரி :

இயக்குநர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
இரண்டாம் முதன்மைச்சாலை,
மையத்தொழில்நுட்பப் பயிலக வளாகம்,
தரமணி, சென்னை 600 113

இறுதி நாள் : **18.12.2026 (வெள்ளிக்கிழமை) – மாலை 5 மணிக்குள்**

12/11/26

இயக்குநர் (கூ.பொ.)

மா. அய்யா

12/11/2026

அடையாள அட்டை

1.	பெயர்	
2.	தந்தை பெயர்/கணவர் பெயர்	
3.	பிறந்த தேதி/வயது	
4.	இல்ல முகவரி	
5.	கைப்பேசி எண் (புலன வசதியுடையது)	
6.	குருதி வகை	
7.	படிப்பு	கல்வெட்டியல் (ம) தொல்லியல் பட்டயப் படிப்பு
8.	காலம்	2027 சனவரி – திசம்பர் (ஓராண்டு)
9.	மாணவர் கையொப்பம்	

வண்ண நிழற்படம் கடவுச்சீட்டு அளவில்

குறிப்பு : மேற்சுட்டிய விவரங்களை நிறைவு செய்து விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்பெற வேண்டும்.